Date. 21.03.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

OS.27/2018

**பி.வா.சா. 1**

**பெயர். திரு. பாலமுருகன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியார் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் தகப்பனார் அ.சா.ஆ.9 ஆவணத்தின் மூலம் எங்களுக்கு தானம் கொடுத்தார் என்றும், அதை பிறகு அ.சா.ஆ. 10 ஆவணத்தின் மூலம் ரத்து செய்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இது தொடர்பாக இது நாள் வரையில் நாங்கள் சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். மறுபடியும் வா.சா.ஆ- 11 ன் படி 2ம் வாதிக்கு மட்டும் ஒரு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. என் தகப்பனாருக்கும், எனக்கும் எதாவது விரோதமா என்றால் விரோதம் எதுவும் இல்லை. என் தகப்பனாரை , நானும், என் சகோதரரும் தொல்லை செய்ததாக என் தகப்பனார் பல புகார்களை எங்கள் மீது காவல் நிலையத்தில் கொடுத்தார் என்றால் இல்லை. ஆனால் ஒரு முறை டி.எஸ்.பி. இடம் புகார் கொடுத்தார். நான் காவல் நிலையத்திற்கு சென்று 1 முதல் 3 பிரதிவாதிகள் சேர்ந்து 1 , 2 வாதிகள் பெயரில் புகார் கொடுத்தோம். என்ன புகார் கொடுத்தோம் என்றால் டி.எஸ்.பி. இ,டம் சொத்து பிரிக்க சொல்லி புகார் கொடுத்தோம்.

டி.எஸ்.பி இது குறித்து என் அப்பாவிற்கும் , கோபிக்கும் சம்மன் அனுப்பினார். அவர்கள் வந்து ஆஜர் ஆனார்களா என்றால் ஆஜர் ஆகவில்லை. அதன் பிறகு புகாரின் மீது மேல் நடவடிக்கை எடுத்தேனா என்றால் காவல் துறை கண்காணிப்பாளரிடம் கொடுத்தேன். நில அபகரிப்பு பிரிவில் கொடுத்தேன். அவர்கள் கூப்பிட்டதற்கும் அவர்கள் இருவரும் ஆஜராகவில்லை. எனக்கு பாகம் வேண்டும் என்று அப்பாவிடம் போகாமல் எதற்கு காவல் துறைக்கு சென்றோம் என்றால் பிரித்துக்கொடுப்பார்கள் என்று போனோம். இது குறித்து வழக்கு போட்டோமா என்றால் நாங்கள் போடவில்லை. வாதிகள் வழக்கு போட்டார்கள். காவல் துறை, எஸ்பிக்கும் , டிஎஸ்பிக்கும், வாதிகள் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் அதை குறித்து எனக்கு தெரியாது. நான் காவல் நிலையம் சென்று என் தகப்பனாரையும், சகோதரர்களையும் துன்புறுத்தினேன் என்றும், அவர்களை நாள் பூராவும் காவல் நிலையத்தில் உட்கார வைத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் இருந்தேன். அவர்கள் ஆஜராகவில்லை. வாதிகளை காவல் நிலையத்தில் டி.எஸ்.பி, எஸ்.பி. உட்பட அனைத்து காவல் துறையினரும் துன்புறுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் தான் சொத்துக்களை துராக்கிரதமாக அபகரிக்க வேண்டி காவல் துறையில் புகார் அளித்து அவர்களை துன்புறுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. தேமுதிக கட்சியை சேர்ந்த வெங்கடேசன் என்பவர் திருக்கோவிலூரில் எம்.எல்.ஏ. வாக இருந்தாரா என்றால் இருந்தார். அந்த எம்.எல்.ஏ. விடம் நான் பி. ஏ. வாக இருந்தேன் என்றால் சரியல்ல. நான் எம்.எல்.ஏ. பி.ஏ வாக இருந்து காவல் துறை மூலம் வாதிகளுக்கு நிறைய தொந்தரவு கொடுத்தேன் என்றால் சரியல்ல. கோபி 3ம் நபர்களின் பல சொத்துக்களுக்கு பவர் வாங்கி

சொத்துக்களை விற்றதாக பத்திரம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். அவை பி.வா.சா.ஆ. 13 முதல் பி.வா.சா.ஆ. 20 ஆவணம் என்றால் சரிதான். 1ம் வாதி இன்ஜினியர் படித்து விட்டு கட்டிடம் கட்டும் வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. அவர் மந்திரவாதி ஆவார். அவர் மந்திரவாதி என்பதை தற்போது தான் சொல்கிறேன். நான் பி. வா.சா.ஆ. 12 பாக பிரிவினை செய்து கொள்வதாக ஒரு உடன்படிக்கை பத்திரம் உள்ளதாக போட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் என்ன சொத்துக்கள் உள்ளது என்றால் எங்கள் மூன்று பேர் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் வாட்டர் பிளாண்ட், கோவிந்தம்மாள் நகரில் 6 பிளாட் ஆகியவை சொல்லப்பட்டுள்ளது. கோவிந்தம்மாள் நகரில் 6 பிளாட் என்று ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது. அந்த கோவிந்தம்மாள் நகர் 6 பிளாட் கோபி பெயரில் உள்ளது. அவர் பெயரில் பவர் எழுதப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ. 12 எழுதும் போது பரமசிவம் மற்றும் சுப்பிரமணியம் ஆகியோர் இருந்தார்கள். மேற்படி ஆவணம் விழுப்புரத்தில் கணினி தட்டச்சு மையத்தில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த ஆவணம் 2012 அல்லது 2013 ல் ஏற்படுத்தப்பட்டது. இதில் ஏன் மற்ற சொத்துக்களை சேர்க்கவில்லை என்றால் எங்கள் மூன்று பேர் பெயரிலுள்ள சொத்துக்கள் சம்மந்தப்பட்டது என்பதால் சேர்க்கவில்லை. பி.வா.சா.ஆ. 12 ஆவணத்தில் உள்ள கையெழுத்து கோபியின் கையெழுத்தே அல்ல என்றும், அது போர்ஜரியாக தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. இந்த ஆவணம் போர்ஜரியாக தயார் செய்யப்பட்டது என்று, கோபி என் பெயரிலும், ஐய்யப்பன் பெயரிலும் புதுப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் புகார் கொடுத்தார். ஆனால் இந்த ஆவணம் குறித்து அந்த புகார் கொடுக்கபடவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் ஐய்யப்பன்

கையெழுத்து உள்ளது. ஆனால் அதில் உள்ளது என் கையெழுத்து அல்ல. ஸ்ரீதரின் கையெழுத்து இருக்கிறதா இல்லையா என்று எனக்கு தெரியவில்லை. இந்த ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள 6 நபர்கள் யார் என்றே எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.12 ஆவணம் பொய்யானது என்று புதுப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு அதன் படி விசாரிக்கப்பட்டு நான் காவல் நிலையத்தில் அந்த ஆவணம் போர்ஜரியானது என்று எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அது போன்று எழுதிக்கொடுத்துவிட்டு என் கையெழுத்து அல்ல என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி உடன்படிக்கை உறுதி மொழி பத்திரத்தில் உள்ள ஐய்யப்பனின் கையெழுத்து மட்டும் வா.சா.ஆ. 15 ஆகும். என் அப்பா பொது அதிகார முகவர் என்ற முறையில் கோபி மற்றும் என் பெயருக்கும், ஐய்யப்பன் பெயருக்கும் ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதன் பிறகு அந்த சொத்தை நானோ, ஐய்யப்பனோ கிரையம் செய்துக்கொள்ளவில்லையா என்றால் பணம் நான் தான் கொடுத்தேன். அவர் தெரியாமல் கிரையம் செய்துக்கொண்டார். என் அப்பாவிடம் மூன்று பேருக்கு அக்ரிமெண்ட் போட்டுவிட்டு கோபி பெயரில் மட்டும் கிரையம் கொடுத்தீர்கள் என்று கேட்டேனா என்றால் பதிவு செய்யப்பட்டது எனக்கு தெரியாது. அதன் பிறகு கேட்டோம் . அவர் எழுதி தருகிறேன் என்று சொன்னார். நான் , ஐய்யப்பன் ஆகிய இருவருமே கிரையம் கொடுக்க முன்வரவில்லை என்றும், கோபி பணம் கொடுத்து கிரையம் பெற்றுக்கொண்டதால் அவர் பெயரில் பி.வா.சா.ஆ. 5 கிரையம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. இந்த ஒப்பந்தங்களுக்கோ, கிரையங்களுக்கோ நானும், ஐய்யப்பனும் எந்த பணமும் தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2002 ல்

வா.சா.ஆ. 6, வா.சா.ஆ. 7 ஆவணத்தில் என் பெயரிலும், ஐய்யப்பன் பெயரிலும் சொத்து கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றும், அப்போது கோபி ஊரில் இல்லாததால் அவர் பெயரில் கிரையம் வாங்கப்படவில்லை என்றும், அந்த சொத்தில் கோபிக்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல. அவர் அப்போது குடும்பத்திலேயே இல்லை. நாங்கள் மூன்று பேரும் ஒன்று சேர்ந்து என் அப்பாவையும், கோபியையும் சொத்தை அனுபவிக்கவிடாமல் ஊரை விட்டே துரத்தி விட்டோம் என்றால் சரியல்ல. பாரத ஸ்டேட் வங்கியில் என் தகப்பனார் 18/07/2006 ந் தேதியில் பத்திரங்களை வைத்து கடன் பெற்றார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என் தகப்பனார் அந்த தேதியில் ரூபாய் 4,81,000/- கடன் வாங்கி ஐய்யப்பனுக்கு வாகனங்கள் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல.

**மேற்கொண்டு குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்திவைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது.**